பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 14 திங்கட்கிழமை 28.03.2022 கதிர் 143

### இனிது ரகசியம் அல்ல!

ஆங்கிலத்தில் ஒரு பேச்சு மொழி உண்டு.'Agree to disagree' என்பார்கள். பிணங்கிப் போவதற்கு இணங்கிக் கொள்ளுதல் என்று இதற்கு அர்த்தம் கூறலாம்.

பல வீடுகளில் கணவன் – மனைவி உறவே இப்படி ஓர் இணக்கத்தில்தான் ☞2

## அரசின் உள்ளகப் பொறிமுறைத் திட்டத்துக்குள் தமிழரின் பிரச்சினையைச் சிக்க வைக்க கூடாது

### ரெலோ கோரிக்கை; கூட்டமைப்பின் பேச்சு முயற்சிக்கு பதிலடி



சர்வதேச அழுத்தங்களை நீர்த்துப் போக வைக்கும் அரசின் நகர்விற்கு இடமளிக்க முடியாது. நல்லிணக்க கோரிக்கைகளைக் கையாளுவதில் அவதானம் தேவை. – என்று ரெலோ தெரிவித்திருக்கின்றது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேச்சுகள் ☞9

# ஜெய்சங்கர் – கூட்டமைப்பினர் கொழும்பில் இன்று சந்திப்பு!

### அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேச்சு



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தத் தகவலை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. உறுதிப்படுத்தினார். ☞9

## அரசிலிருந்து வெளியேற மேலும் 10 பேர் தீர்மானம்?

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கான ஆதரவு நாளாந்தம் சரிந்துவரும் நிலையில், மேலும் 10 ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

எனினும், உடனடியாக எதிரணியில் இணையாமல், இவர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்படக்கூடும் என ☞9

## யாழ்.பண்பாட்டு மையம் இன்று எளிமையான திறப்பு வைபவம்!

(கலையமுதன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிசெ. 28



இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் இன்று எளிமையாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. ☞9

## தேசிய அரசு வேண்டாம்; புதிய ஆட்சியே வேண்டும்

### முற்போக்குக் கூட்டணி வலியுறுத்து



தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி தேசிய அரசொன்றை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வந்தாலும், அவ்வாறானதொரு அரசுக்குத் ☞2

## இ.தொ.காவுக்குப் புதிய தலைவர் நியமனம் புதன்கிழமை பொதுச் சபை கூடித் தீர்மானம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவி ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக இருந்து வருகின்ற நிலையில், புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக அக்கட்சியின் பொதுச்சபை எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை கூடவுள்ளது.

அக்கட்சியின் தலைவராகச் செயற்பட்ட ஆறுமுகன் தொண்டமான் 2020ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி காலமானார். அதன் ☞2



## கூட்டமைப்பினருடன் பேச்சு தொடரும் தமிழரின் மனதை வெல்வார் கோட்டா

### அடுத்த தடவையும் அவரே ஜனாதிபதி என்கிறது 'மொட்டு'

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ☞2




## ரணிலின் கோரிக்கைக்கு ஆளும் கட்சி பச்சைக்கொடி



இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை ஆளும் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்று காலை ரணில் ☞2

eDUS Online School with GLOBAL STANDARDS

சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!

English & Tamil Medium

அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.

தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L

அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

Enroll Now

Admissions

www.edus.lk

0777 123 330

# வதைகள் தொடர்ந்தால் ஆட்சியை விரட்டுவோம்

## 31ஆம் திகதி மஹா சங்கத்தினர் முக்கிய தீர்மானம் என்கிறார் தேரர்



நாட்டு மக்களை இந்த அரசு தொடர்ந்தும் வதைத்தால், ஆட்சியை விரட்ட நாம் பின்னிற்கமாட்டோம்.

–இவ்வாறு அபயராக விகாரையின் பிரதான விகாராதிபதியான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

எதிர்வரும் 31ஆம் திகதி மஹாசங்கத்தினர் ஒன்றுகூடவுள்ளோம். இதன்போது அரசு தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் – என்றார்.

# யாழில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் தாக்கு

## காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினர் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் கோண்டாவில் வீட்டினுள் நேற்று மாலை 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற மரணச் சடங்கில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரண்டு குழுக்களுக்கிடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு அது மோதலாக மாறியுள்ளது.

அதன் பின்னணியில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டினுள் புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வீட்டில் இருந்த பொருள்களையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# புத்தூரில் இளைஞர் கடத்தல்

யாழ்., புத்தூர் மேற்கு, நவக்கிரியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு, நவகிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடிய போது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்குள்ளான இளைஞரின் தந்தை தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இருவர் நேற்றுமுன்தினம் பிணையில் வெளியே வந்துள்ளனர் என்று இளைஞரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்ந்து ஓடுகின்றது. நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பது போல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகள் இடையேயான உறவும் அப்படித்தான் தொடர்கின்றது. தமிழரின் தலைவிதி சம்பந்தமான அனைத்து முக்கிய விடயங்களிலும் நாம் பிணங்கி, முரண்பட்டு எதிரும் புதிருமாக நிற்போம், ஆனால் நாங்கள், நாங்கள் எம்.பிக்களாகுவதற்காக மட்டும் தேர்தல் என்றதும் இணங்கி மக்கள் முன் ஒன்றுபட்டு நிற்போம் என்ற தத்துவம் – அல்லது சீத்துவம் – தொடர்கின்றது.

தமிழர்களின் தலைவிதி தொடர்பான விடயங்கள் மூன்று தரப்புகள் சம்பந்தப்பட்டவை.

ஒன்று – இலங்கை அரசு; அடுத்தது – இந்தியா; மூன்றாவது – சர்வதேசம்.

இலங்கை அரசுடன் எவ்வாறு ஈடுபாடு காட்டுவது, ஊடாடுவது என்பது தொடர்பில் தமிழரசு – புளொட் கூட்டு நிலைப்பாட்டுக்கு மாறாக ரெலோ நிற்கின்றது. வெள்ளியன்று நடந்த அரசு – கூட்டமைப்புப் பேச்சின் பின்னரும் அந்தப் பேச்சில் கலந்து கொண்ட கூட்டமைப்பு நிலைப்பாட்டை பின்னி எடுத்திருக்கின்றார் ரெலோ 'மதியுரைஞர்' – மன்னிக்கவும் பேச்சாளர் – குருசுவாமி சுரேந்திரன்.

அடுத்தது – இந்தியா. இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவை எப்படிக் கையாள்வது என்பதில் ரெலோவும், புளொட்டும் மற்றைய அல்லது பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசில் இருந்து எவ்வாறு வேறுபட்டு நின்றன என்ற சீத்துவத்தை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் ரெலோ முன்னெடுப்பில் கூட்டப்பட்ட தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் கண்டோம்.

மூன்றாவது – சர்வதேசம். இன்று தமிழரைப் பொறுத்த வரை சர்வதேசம் என்றால் அதில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்தான் முக்கியமானது. அந்தக் கவுன்ஸிலுக்கு, இலங்கைத் தமிழரின் நிலைப்பாட்டை ஒட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எனற கோதாவில் – அதில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் தலைவர் என்ற பொறுப்பில் அவை மூன்று சார்பாகவும் தாம் கடிதம் எழுதுகின்றார் என்று குறிப்பிட்டு – சம்பந்தன் கடிதம் அனுப்புகின்றார். இரண்டு வாரங்களில் இன்னொரு கடிதத்தை, விக்கியின் கட்சி, சுரேஷின் கட்சி, ஸ்ரீகாந்தாவின் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ஜெனிவாவுக்கு அனுப்புகின்றன ரெலோவும் புளொட்டும்.

இவ்வளவு முரணிலையில் இருந்து கொண்டு கூட்டமைப்பு என்று பம்மாத்துக் காட்டுகின்றன இந்த மூன்று கட்சிகளும்.

வீட்டுக்குள் புருஷனும் பொஞ்சாதியும் அடிபிடி, குத்துவெட்டு, ஒரே களேபரம். குடித்தனம் சந்தி சிரிக்கின்றது. அவ்வளவும் நடக்க, மறுநாள் பக்கத்து வீட்டுக் கலியாணத்துக்கு இருவரும் ஒட்டிக் கொண்டு சதி – பதியாக ஒய்யார ஊர்வலம் போனார்களாம்.

அப்படித்தான் இருக்கப்போகின்றது இன்று மாலை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்திக்கச் செல்லும் கூட்டமைப்பின் ஒற்றுமை நிலையும்.

இன்று மாலை 430 மணிக்கு கொழும்பில் இந்தியத்தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லமான இந்திய ஹவுஸில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பு பங்குபற்றுகின்றது. கொழும்பில் இருக்கும் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஒன்றாகக் கூட்டத்தில் பங்குபற்றுவராம். யாழ்ப்பாணத்தில் நிற்கும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா இந்தச் சந்திப்பில் பங்குபற்றார்.

தமிழர்களின் தலையாய விடயங்களில் முரண்பட்டு, பிணக்குப்பட்டு, கூட்டமைப்பு என்ற கட்டுப்பாட்டையே உதறித் தள்ளி, தனித்தனி வழி போகும் இந்தத் தலைவர்கள் பெரிய பிரமுகர்களைச் சந்திப்பதற்கு மட்டும் ஒரு கூட்டமைப்பு என்ற பெயரில் முகவேடமிட்டு எப்படி சங்கோஜம் ஏதுமின்றிப் போகின்றார்கள்? எனக்கு விளங்கவில்லை. எல்லாம் வெறும் பம்மாத்து நடிப்புத்தான் போலும்.

★ ★ ★

ஜனாதிபதி தலைமையிலான அரசுத் தரப்புக்கும் தமிழ்த் கூட்டமைப்புக்கும் இடையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேச்சுகளின் போது சுமந்திரன் எம்.பி. ஒரு கேள்வி கேட்டிருந்தார்.

"யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தால் அல்லவா மாவட்ட அபிவிருத்தி குறித்து அங்கு பேச முடியும்?" – என்றார் சுமந்திரன். அது சரியான கேள்விதான். நீண்ட காலமாக அந்தக் கூட்டம் நடத்தப்படவேயில்லை. அது இல்லாமல் அமுல்பேபி இராச்சியம்தான் – காட்டு தர்பார்தான் – தொடர்கதையாக இங்கு நீடிக்கின்றது.

இந்தக் குழுவுக்குத் தனது பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கத்தை நியமித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அதன் பின்னர் அந்தக் கூட்டத்தை எப்போது கூட்டுவீர்கள் என்று எழுத்தில் மாவட்டச் செயலாளரான அரச அதிபரைக் கேட்டார் கீதநாத்.

"இதோ கூட்டுகிறேன். ஏப்ரல் 2ஆம் திகதி சனிக்கிழமை கூட்டம்." – என்றார் யாழ்.அரச அதிபர்.

இப்போது அது காலவரையறை குறிப்பிடாமல் தள்ளிப் போடப்பட்டு விட்டது என்று செய்தி வெளியாகியுள்ளது.

நான் நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டபடி, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு இன்னொரு இணைத் தலைமையை அரசுத் தலைவர் நியமித்த பின்னர்தான் இந்தக் கூட்டம் நடைபெறுமோ, என்னவோ...?

– மின்னல் –

## தேசிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவை வழங்காது.

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று தகவல் வெளியாகியுள்ளது. எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு விடுக்கப்பட்டாலும் நாம் அதில் இணைய மாட்டோம்.

தேசிய அரசமைப்பதால் பாரிய மாற்றம் ஏற்படப்போவதில்லை. இதே ஜனாதிபதிதான் ஜனாதிபதிப் பதவியில் தொடர்வார். நாடாளுமன்றத்திலும் அவர்களின் அதிகாரமே காணப்படும்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதியதொரு ஆட்சியே எமது இலக்கு. அந்த இலக்கை அடைவதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதற்காக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு, மக்கள் பக்கம் நின்று ஒத்துழைப்பு வழங்குவோம்.

உதவி ஆசிரியர் பிரச்சினை தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளேன். கடிதமும் கையளிக்கப்பட்டுள்ளது. விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை தமிழ் முற்போக்குக் கூட்டணி நாளை (இன்று) சந்தித்துப் பேச்சு நடத்தும்.

இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ள பாரதப் பிரதமருக்கான ஆவணம் மற்றும் மலையக மக்களுக்கான திட்டங்கள் பற்றி இதன்போது கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

## இ.தொ.காவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பின்னர் தலைமைப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் இருந்தபோதும், இது வரை அப்பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

எதிர்வரும் 30ஆம் திகதி கொட்டகலை சி.எல்.எப்பில் கூடவுள்ள பொதுச்சபையில் ஏனைய பதவிகளுக்குரிய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

## கூட்டமைப்பினருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சம்பந்தன் சிறந்த மூத்த அரசியல்வாதி. அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆரம்பித்துள்ள பேச்சை உள்நாட்டில் உள்ளவர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் வரவேற்றுள்ளனர்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியும் கூட்டமைப்பினரும் திறந்த மனதுடன் பேச்சை ஆரம்பித்துள்ளனர். இது ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் எதிரணியினருக்குப் பேரிடியாக அமைந்துள்ளது.

கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்.

சஜித் அணியினர் என்னதான் திட்டங்கள் வகுத்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அடுத்த தடவையும் கோட்டாபய ராஜபக்சவே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் – என்றார்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)


விக்கிரமசிங்க விடுத்த அறிக்கையில், சர்வதேச நாணய நிதிய அறிக்கை தொடர்பில் உடனடியாக நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

முன்னாள் பிரதமரின் இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதான கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**வாடகைக்கு வீடு தேவை**

நல்லூர் கோவிலுக்கும் கச்சேரியடிக்கும் இடைப்பட்ட, இரண்டு கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள், நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு, வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு – 0775465577



# கிளிநொச்சியில் ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வளர்த்த கடா மார்பில் பாயலாம்!

'ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்; வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்' – என்பார்கள். அரசியலுக்கும் இது பொருந்தும் போல.

பேரினவாத அரசியல் ஓடத்தில் பயணித்தவர்கள் அதை இப்போது நல்லிணக்க வண்டியில் ஏற்றிப் பார்க்கின்றார்கள். இனி என்ன? இதுவரை, நல்லிணக்க வண்டியில் பயணித்த அரசியல்வாதிகள் பேரினவாத அரசியல் ஓடத்துக்குப் பாய வேண்டியதுதான்.

விடுதலைப் புலிகளையும், அவர்களை அழித்த சாதனையையும் வைத்துத்தான் இதுவரை ராஜபக்ஷக்கள் அரசியல் செய்தார்கள். தெற்கில் தேர்தல் அரசியலில் பெருவெற்றி வாகைகளைச் சூடினார்கள். 2014 ஆம் ஆண்டு இறுதியுடன் அவர்களின் முதலாம் கட்ட இருண்ட ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்ட பின்னர் 2019 இல் அவர்கள் மீளெழுச்சி பெற்றமை கூட இதே பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைப் பெருக்கெடுக்க வைத்துத்தான் என்பது வெளிப்படையானது.

இப்போது அவர்களே இந்த இனவாத அரசியலை வெறுத்து, ஒதுக்கி, நியாயம் பேசும் அரசியல் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதுதான் அரசியல் விநோதம். விபரீதமும் கூட.

"அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் விவகாரத்தை முன்வைத்து இன்னமும் எவ்வளவு காலத்துக்கு அரசியலை முன்னெடுக்கப் போகின்றீர்கள்?" – என்று முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோரிடம் ராஜபக்ஷ தரப்பில் இருந்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

"புலிகள் ஆயுதத்தால் பெற முடியாததை கூட்டமைப்பு டொலரை முன்னிறுத்தி பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றது. அதனால்தான் சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டது." – என்று மேற்படி தரப்பினர் கண்டியில் மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்பு, அவர்கள் தரப்பில் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில்ல குறிப்பிட்டார்.

அரசு – கூட்டமைப்புப் பேச்சை ஒட்டியும் இத்தகைய இனவாதக் கருத்துக்களே அத்தரப்பினால் முன்வைக்கப்படுகின்றன.

இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ –

"விமல் வீவரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இனவாதத்தை வைத்துத்தான் அரசியல் நடத்தி வருகின்றார்கள். அரசுக்குள்ளிருந்த போதும் இனவாத கருத்துக்களைத்தான் வெளியிட்டார்கள். அதனால் அரசு பெரும் அவப் பெயரைச் சந்தித்தது. தற்போது அரசுக்கு வெளியில் சென்றும் இனவாதக் கருத்துக்களைத் தான் முன்வைத்து வருகின்றனர். இவர்களின் இந்தக் கருத்துக்களால் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான – பேச்சுகளில் எந்தத் தடங்கலும் ஏற்படாது. அதே போல தமிழர் – சிங்களவர் உறவிலும் பாதிப்பு ஏற்படாது.

"அழிக்கப்பட்ட புலிகளை முன்வைத்து கம்மன்பில எத்தனை நாளைக்குத்தான் அரசியலை முன்னெடுக்கப் போகின்றார்? ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசு தமிழ்க் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுக்களை முன்னெடுத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கும்." – என்று பஸில் ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

தாம் வளர்த்த பேரினவாதக் கடா தம் மார்பில் பாயும் அவலம் ராஜபக்ஷக்களும் நேரும். அதை சமாளிப்பதில்தான் அவர்களின் அரசியல் எதிர்காலமே தங்கியிருக்கும் என்ற நிலைமை உருவாகும் சாத்தியம் உண்டு.

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண அரசு புலம்பெயர் தமிழர் உதவியை நாட வேண்டும்!



### திஸ்ஸ விதாரணவும் வலியுறுத்து

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களின் உதவியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசமுறை கடன் நெருக்கடியில் இருந்து மீள கடன்பெறுவது சிறந்த கொள்கையாக அமையாது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இனிவரும் காலங்களிலாவது நடைமுறைப் படுத்த வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கிற்காக 13 ஆவது திருத்தம் தென்னிலங்கையில் தவறான முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களின் உதவியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, அத்தியாவசியப் பொருள்களின் விலை எவ்வித கட்டுப்பாடுமில்லாத வகையில் உயர்வடைந்து செல்கிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானித்துக் கொள்கிறார்கள், நாட்டில் அரசாங்கம் என்றதொன்று உள்ளதா என மக்கள் அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடுகிறார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாத அளவிற்கு இலங்கையின் அரசமுறை கடன் அதிகரித்துள்ளது.

வருமானத்தைக் காட்டிலும் வருடாந்தம் செலுத்த வேண்டிய அரசமுறை கடன் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது.

கடன் நெருக்கடியில் இருந்து மீள கடன் பெறுவது சிறந்த பொருளாதாரக் கொள்கையாக அமையாது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் சர்வதேசத்தில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். பலர் தொழில் முறை மற்றும் முதலீட்டு துறையில் முன்னேற்றமடைந்துள்ளார்கள்.

புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை ஊக்குவிக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை லங்கா சமசமாஜ கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக 13 ஆவது திருத்தம் தென்னிலங்கையில் தவறான முறையில் சித்திரிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டின் போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், புலம்பெயர் தமிழர் அமைப்பு தொடர்பில் எடுத்துரைத்துள்ளேன்.

தவறான புரிதல்களுடன் காலம் காலமாக முரண்பட்டுக்கொண்டிருப்பதால் எவ்வித பயனும் கிடைக்கப்பெறாது, இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகும் என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும். – என்றார்.

## மின்சார நெக்கடிக்கு முக்கிய காரணம் காடழிப்பும் ஆகுமாம்!

### சுற்றாடல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

நாடு எதிர்கொண்டுள்ள மின்சார நெருக்கடிக்கு காடு அழிப்பும் ஒரு முக்கிய காரணம் என சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் 16 வீதமாக காடுகளின் பரப்பளவு குறைந்து வருவதே நிலத்தடி நீர் பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் என இயற்கை ஆய்வு மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரவீந்திர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நீர் இருப்பு பற்றாக்குறையை நாம் தொடர்ந்தும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக சுற்றாடல் ஆர்வலர் ரவீந்திர காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர்த்தேக்கங்களின் கணிசமான வீதம் மண்ணால் நிரம்பியுள்ளதாகவும், இலங்கைச் சூழல் வெப்பமயமாதல் காரணமாக ஆவியாதல் அதிகரித்துள்ளமையால் நீர்த்தேக்கங்களின் நீர் இருப்புக்கள் விரைவாகக் குறைவடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதால், தினசரி மின் உற்பத்தியில் நீர்மின்சாரத்தின் பங்களிப்பு சுமார் 20 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இந்த நாள்களில், தினசரி மின்சார உற்பத்தியில் அனல் மின் நிலையங்கள் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. இதற்கு அதிக நிலக்கரி, டீசல், எரிபொருள் மற்றும் பிற எரிபொருள்கள் தேவைப்படுகின்றன. தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியால் எரிபொருள் இறக்குமதியும் சவாலாக உள்ளது.

எதிர்வரும் காலங்களில் மழை பெய்யாவிட்டால் நாட்டில் மின் உற்பத்தியில் பெரும் நெருக்கடி ஏற்படும் என மின் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## காசோலைகள் திரும்பும் நிலையில் மின்சார சபை!

நாட்டின் முன்னணி அரசவங்கியொன்று இலங்கை மின்சார சபையின் அனைத்து காசோலைகளையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை மின்சார சபையின் கணக்குகளில் பணப்பற்றாக்குறை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

எனவே, இலங்கை மின்சார சபைக்கு வங்கி மிகைப்பற்று வழங்குவதை நிறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். காசோலைகளை வங்கிக்கு அனுப்ப வேண்டாம் என இலங்கை மின்சார சபையின் பண முகாமையாளர் ஏற்கனவே சபைக்கு அறிவித்துள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், பண்டிகை மாத சம்பளத்தை வழங்க முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாபய அரசைப் பிணை எடுக்க தமிழ்க் கூட்டமைப்பு மீண்டும் முயற்சி!

## கருணாவதி பத்மநாதன் சாடல்



கடுமையான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து இலங்கையைப் பிணை எடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதைத்தான் ஜனாதிபதியுடனான பேச்சுகளின்பின்னர்கூட்டமைப்பின்பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரச பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பு இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு –

தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமாக அரசியல் பிரச்சினை ஒன்றோ, அல்லது அன்றாடப் பிரச்சினைகளோ இருக்கின்றன என சிறிலங்காவின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு போதும் ஏற்றுக்கொண்டவரல்லர். அதனால்தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் சென்றுள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதை அவர் தவிர்த்து வந்திருந்தார். தான் தனித்து சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் என்பதை அவர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியும் வந்திருக்கின்றார். தமிழ் மக்கள் எதிர்கொள்ளும்அன்றாடப்பிரச்சினைகளான காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களில் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தும் கூட, எந்தவிதமான நகர்வையும் முன்னெடுக்க அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

பதிலாக மிருசுவிலில் தமிழ் மக்களைப் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனைக்குள்ளான சிங்கள படை அதிகாரி ஒருவரைத் தமது அதிகாரத்தைப் பாவித்து மன்னிப்பளித்து ஜனாதிபதி விடுதலை செய்தார். குமாரபுரம் படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அரசாங்கம் எவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுகும் என்பதற்கு இவை இரண்டும் மட்டுமல்ல மேலும் பல உதாரணங்கள் உள்ளன.

இப்போது பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து, சிங்கள மக்கள் கொதித்தெழுந்து வீதிகளில் இறங்கியுள்ள நிலையில், மேற்கு நாடுகளின் உதவி அரசாங்கத்துக்கு அவசர தேவையாகவுள்ளது. இல்லையெனில் மக்கள் கிளர்ச்சி ஒன்று வெடிக்கலாம் என்பதும், எதிரணிகள் அதனைப் பயன்படுத்த தயாராக இருப்பதும் அரசுக்கு எச்சரிக்கையாகவுள்ளது.

இந்தப் பின்னணியில் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. கடந்த வாரம் கொழும்பு வந்த அமெரிக்க அரசியல்விவகாரங்களுக்கானதுணைச் செயலாளர் விக்ரோரியா நூலான்ட், ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதும் இதனை வலியுறுத்தினார். அத்துடன், புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்தப் பின்னணியில்தான், இரண்டரை வருடங்களாகக் கூட்டமைப்புடன் பேச்சைத் தவிர்த்து வந்த ஜனாதிபதி அவசரமாக அவர்களைப் பேச்சுக்கு அழைத்தார். கூட்டமைப்பும் எந்த நிபந்தனைகளும் இன்றி பேச்சுக்கு சென்றிருக்கின்றது.

இது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமாகவுள்ள மேற்கு நாடுகளின் உதவியைப் பெறுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ அரசு போடும் நாடகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோகின்றதா என்ற கேள்வியைத்தான் எழுப்புகின்றது.

அந்நியச் செலாவணிப் பிரச்சினையிலிருந்து இலங்கையை பிணை எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதைத்தான் ஜனாதிபதியுடனான பேச்சுகளின் பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

காணி அபகரிப்பு தொடர்பில் தெரியாத ஒருவராகவா ஜனாதிபதி இதுவரை இருந்துள்ளார்? 2010 இற்கும் 2015 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, அரசுடன் 18 சுற்றுப் பேச்சுக்களை கூட்டமைப்பு நடத்தியது. அப்போது பேசப்பட்ட விடயங்கள்தான் வெள்ளிக்கிழமை கோட்டாபயவுடன் நடந்த பேச்சுக்களின் போதும் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இவை தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்பது போல ஜனாதிபதி சொல்கின்றமை முற்று முழுதாக ஒரு நாடகம். அதனை நம்புவது போல, வெளியே வந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சொல்லும் தகவல்கள் சர்வதேச சமூகத்திடமிருந்து அரசைப் பாதுகாக்கக் கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதை பகிரங்கப்படுத்துகின்றது.

தமிழர்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் புலம்பெயர்த்த தமிழ் அமைப்புக்களைத் தடை செய்துவிட்டு தமக்கு சார்பான சில அமைப்புக்களுடன் பேசுவதற்கான திட்டம் ஒன்றுடன்தான் அரசு செயற்படுகின்றது.

புலம்பெயர் தமிழர்களின் நிதியை வரவழைக்கவே இந்த சதியின் நோக்கம். இதற்கும் கூட்டமைப்பு துணை போவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. தாயகத்திலும், புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இந்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு செயற்படுவார்கள் என நாம் நிச்சயமாக நம்புகிறோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# பணவீக்கம் குறித்த அரச அறிவிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் தக்கபதிலடி!

## ஹர்ஷ டி சில்வா சாட்டை



இலங்கையின் பொதுக்கடன் நிலைபேறான தன்மையை இழந்துள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை அரசாங்கத்துக்கு பாரியதொரு தோல்வியாகும்.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவக் கொள்கை முழு நாட்டு மக்களையும் கடனாளி யாக்கியுள்ளது.

நாணயம் அச்சிடுவதால் பணவீக்கம் ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிட்டதற்கு நாணய நிதியம் கன்னத்தில் அறைந்தாற்போல் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண நாடாளுமன்றத்தின் ஊடாக நிபந்தனையற்ற ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளோம்.

நிதியமைச்சர் நாடாளுமன்றத்துடன் சுமுகமாக செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

சர்வதேச நாணய நிதியம் தமது நிறுவனத்தின் 4 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத் தன்மைதொடர்பில்அதில்குறிப்பிடப்பட்டுள்ள மோசமான விடயங்களுக்கு தற்போதைய அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். இலங்கையின் பொதுக்கடன்கள் நிலைபேறான தன்மையை இழந்துள்ளன என மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை அரசாங்கத்துக்கு பாரியதொரு தோல்வியாகும்.

அரச வருமானத்தை அதிகரித்தல்,அதிகரிக்கும் செலவுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் நாணய நிதியம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

வரி அதிகரிப்பு மற்றும் வரி விரிவாக்கம் தொடர்பாக நாணய நிதியம் அரசாங்கத்துக்கு விசேட ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

அரச செலவுகளை இயலுமான அளவு குறைத்துக்கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளது, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கும் நிவாரணம் மற்றும் நலன்புரித் திட்டங்களுக்கான செலவுகளை மட்டுப்படுத்தி அரச செலவுகளை மட்டுப்படுத்த வேண்டாம் என அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

வீண் அரச செலவுகளை முழுமையாகக் குறைத்துக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பணம் அச்சிடுவதால் பணவீக்கம் அதிகரிக்காது என அரசாங்க தரப்பில் உள்ள பொருளாதார நிபுணர்கள் தொடர்ந்து குறிப்பிட்டு வந்தார்கள்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மாத்திரம் 1.6 ரில்லியன் நாணயம் அச்சிடப்பட்டுள்ளது.

நாணய அச்சிடலை விரைவாக மட்டுப்படுத்துமாறும் அல்லது நிறுத்துமாறும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு கன்னத்தில் அறைந்தாட்போல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் தவறான நிதி முகாமைத்துவத்தால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன், ஒட்டுமொத்த மக்களும் கடனாளியாக்கப்பட்டுள்ளார்கள்.

நிதி விவகாரம் தொடர்பில் அரசாங்கம் நாடாளுமன்றுடனும்,அரச பொதுநிதிக்கான குழுவுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நிதி நெருக்கடிக்கு நாடாளுமன்றின் ஊடாக மாத்திரமே தீர்வுகாண வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாடாளுமன்றின் ஊடாக அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்.

நிதி விவகாரத்தில் அரசாங்கம் குறிப்பாக நிதியமைச்சு நாடாளுமன்றுடன் சுமுகமாக செயற்படுவதில்லை. நிதி நெருக்கடிக்கு நாடாளுமன்றின் ஊடாகத் தீர்வு காண வேண்டுமாயின் முதலில் நிதியமைச்சர் நாடாளுமன்றத்துக்கு வந்து நாட்டின் நிதி நிலைமை தொடர்பான உண்மைத் தன்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும். – என்றார்.

## பேரீச்சம்பழம் இறக்குமதிக்குத் தடை?

நாட்டில் நோன்பு காலத்திற்கு தேவையான பேரீச் சம்பழம் இல்லாத காரணத்தினால் இஸ்லாமிய மக்கள் தங்களது வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தெவடகஹ பெரிய பள்ளி வாசலின் தலைவர் ரியாஸ் சாலி இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் அண்மையில் இறக்குமதித் தடை விதிக்கப்பட்ட அத்தியா வசியமற்ற பொருள்களின் பட்டியலில் பேரீச்சம்பழமும் உள்ளடங்குவதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நாட்டில் தற்போது பேரீச்சம் பழத்துக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.


இஸ்லாமிய மரபுகளுக்கு அமைய நோன்பு காலத்தில் இஸ்லாமிய மக்கள் மூன்று பேரீச்சம் பழங்களை உணவுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தநிலையில் இஸ்லாமிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 40 மெற்றிக்தொன் பேரீச்சம்பழம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் விவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

எனினும் நோன்பு காலத்துக்கு போதுமான பேரீச்சம்பழம் இல்லை என பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது.

# அரசுக்கு எதிராக நாமும் வீதிக்கு இறங்க நேரிடும்!

## எச்சரிக்கிறார் முருந்தெட்டுவே ஆனந்த தேரர்



ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கம் முறையாகச் செயற்படாவிடின் அரசாங்கத்துக்கு எதிராக நாமும் வீதிக்கிறங்க நேரிடும். எதிர்வரும் 31 ஆம் திகதி மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் குறிப்பிடுகையில்–

சிறந்த நோக்கத்துக்காக ஆட்சி மாற்றத்தில் முன்னின்று செயற்பட்டோம். அரசாங்கத்தை விமர்சிக்காது உள்ளவர் வீட்டில் இருந்து ஒரு குவளை தண்ணீர் பெற்றுக் கொள்வது தற்போது ஆச்சரியமாகவுள்ளது. அந்தளவிற்கு முழு நாட்டு மக்களும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். நடைமுறையில் தோற்றம் பெற் றுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிரதமர் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மீது மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது. அவரை 6 மாத காலத்துக்கு அமைச்சு பதவியில் இருந்து விலக்கி வைக்குமாறு ஏற்கெனவே வலியுறுத்தினோம். ஒன்று அவரை பதவி நீக்க வேண்டும் அல்லது அவருக்கு பிறிதொரு அமைச்சு பதவியை வழங்க வேண்டும். அரசாங்கம் தவறுகளைத் திருத்திக்கொண்டு மக்களாணைக்கு மதிப்பளித்து செயற்படாவிடின் நாமும் அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கிறங்க நேரிடும். நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமை தொடர்பாக எதிர்வரும் 31ஆம் திகதி அபயராம விகாரையில் சகல மகாசங்கத்தினரையும் ஒன்றிணைத்து விசேட ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

மகாசங்கத்தினரும் அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளார்கள்.

31ஆம் திகதி எமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி பல விடயங்களைப் பகிரங்கப்படுத்துவோம். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு சிறந்த தீர்மானங்களை முன்னெடுப்போம். – என்றார்.



# இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளின் விலையை அதிகரிக்காது!

## காமினி லொக்குகே உத்தரவாதம்

ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருளின் விலையை அடிக்கடி அதிகரிப்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது.

ஐ.ஓ.சி நிறுவனத்துடனான எண்ணெய் விநியோக ஒப்பந்தத்தை பரிசீலனை செய்யுமாறு வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளின் விலையை அதிகரிக்காது என வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருளின் விலையை அடிக்கடி அதிகரிப்பது பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகிறது.

கடந்த 10ஆம் திகதி விலை அதிகரிக்கப்பட்ட போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்கமைய விலையைப் பரிசீலனை செய்யுமாறு ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிர்வாக சபைக்கு அறிவுறுத்தினோம்.

ஐ.ஓ.சி. நிறுவனத்தினுடனான எரிபொருள் விநியோக ஒப்பந்தத்தை பரிசீலனை செய்யுமாறு வலுசக்தி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்.

ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படுத்த முடியுமாயின் அது தொடர்பில் அமைச்சரவை மட்டத்தில் அவதானம் செலுத்தப்படும்.

ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படாது. தற்போது நடைமுறையில் உள்ள விலையில் எவ்வித மாற்றமும் கிடையாது.

கடந்த நாள்களைக் காட்டிலும் தற்போது எரிபொருள் பெறுதலுக்கான வரிசை கட்டம் கட்டமாகக் குறைவடைந்து வருகிறது.

40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் தரையிறக்கப்பட்டுள்ளது. 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடையும். அத்துடன் எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் 37 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் எரிபொருள் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடையும். –என்றார்.

# டொலர் பிரச்சினைக்குத் தீர்வுகாண கஞ்சாவை ஏற்றுமதி செய்ய முடிவு!

## சர்வகட்சி மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டதாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் அந்நியச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக கஞ்சாவை வளர்த்து ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அதற்கு அனைத்து கட்சி பிரதிநிதிகளும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

அமைச்சர் பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, எம்.ஏ. சுமந்திரன் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது..

ஏற்றுமதிக்காக கஞ்சாவை பயிரிடுவதற்கு அல்லது வளர்ப்பதற்கு தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்வதற்கான யோசனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கஞ்சா விஷ போதைப்பொருள் அல்ல என சட்டமா அதிபர் அறிவுறுத்தியமையையடுத்து, அது நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே, கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குமாறு தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணையை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மறுசீரமைப்புகளை நாம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி உள்ளோம்!

## சர்வதேச நாணய நிதியத்துக்கு மத்திய வங்கி விளக்கம்

சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கொள்கை ரீதியான மறுசீரமைப்புக்களில் பலவற்றை நிதியமைச்சுடன் இணைந்து தாம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியிருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கைக்குக் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய 95 பக்க அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பான அதன் மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுச் செயன்முறை கடந்த 2021 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிதியமைச்சு, மத்திய வங்கி, பல்வேறு அரச கட்டமைப்புக்கள், நிதிக்கட்டமைப்புக்கள், தனியார் அமைப்புக்கள், தனிநபர்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தமை, அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகத்துக்குத் திரும்பியதன் பின்னர் மேலதிக தெளிவுபடுத்தல்கள் கோரப்பட்டமை, குறித்த மதிப்பீட்டு அறிக்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையால் ஆராயப்பட்டமை, அதன் முடிவில் பணிப்பாளர் சபையால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டமை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜனாதிபதியை சந்திப்பதற்காக நாட்டுக்கு வருகைதந்தமை, இலங்கை அதிகாரிகளால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டமை, சர்வதேச நாணய நிதியத்தின் இறுதி அறிக்கை 25 ஆம் திகதி வெளியிடப்பட்டமை ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளன. அதேவேளை நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கியால் ஏற்கனவே பல்வேறு கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து நாணயக்கொள்கை இறுக்கமாக்கப்பட்டமை, நாணயமாற்றுவீதம் தளர்த்தப்பட்டமை, வெளிநாட்டு நாணய மாற்றுச்சந்தை தொடர்பான வரையறைகளை நீக்குதல், வருமானத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்தல், முக்கிய பொருள்களுக்கு சந்தையை மையப்படுத்திய விலை மாறுதல்களுக்கு இடமளித்தல் ஆகியனவும் அதில் உள்ளடங்குகின்றன. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் நெருங்கிச்செயற்படுவதற்கான முனைப்பைக் காண்பிக்கும் நிலையில், அத்தகைய தொடர்புகளைப் பேணுவதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு மத்திய வங்கி தயாராக இருக்கின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எம்.பிக்கள், அமைச்சர்களுக்கு

# விமானவசதி வழங்கலை மட்டுப்படுத்த தீர்மானம்!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு விமான வசதிகள் வழங்குவதை மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடி மற்றும் கொரோனா நிலைமையால் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அத்தியாவசியத் தேவைக்காக, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே விமான சேவைகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள எண்ணெய் கையிருப்பு, அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் முகாமைத்துவம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிதியமைச்சருக்கு தகுதியில்லை என்பதாலேயே ஆலோசனைக் குழுவை ஜனாதிபதி நியமித்தார்!

## விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



பொருளாதார நெருக்கடிக்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டிய தேவை கிடையாது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் அடிப்படைத் திறன் இல்லாதவரை நிதியமைச்சராக்கி நாட்டின் பொருளாதாரத்தை கடும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதியமைச்சருக்குப் பொருளாதாரத் திறன் இல்லாத காரணத்தால் தான் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனை குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

உலகில் வேறெந்த நாடுகளிலும் இவ்வாறான தன்மை கிடையாது.

வறுமைக் கோட்டில் பாதிக்கப்பட்டுள்ள ஏழ்மை நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட துறைசார் தேர்ச்சிப்பெற்றவர்களாக உள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

யுத்த வெற்றியைக் குடும்ப வெற்றியாக்கி தற்போதைய அரசாங்கம் முழு நாட்டையும் பாரிய நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

30 வருட கால யுத்தத்தை நான் முடிவிற்கு கொண்டு வந்தேன் என இலங்கை மக்களிடம் பெருமையாக குறிப்பிடும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்திடம் நான் யுத்தத்துக்குத் தலைமை தாங்கவில்லை முப்படையினர் தான் யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தார்கள் எனக் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஒத்துழைப்பு வழங்கியதற்கு எம்.சி.சி. ஒப்பந்தம் பிரதான காரணியாக அமைந்தது.

நல்லாட்சி அரசாங்கம் எவ்வகையிலாவது எம்.சி.சி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இருந்ததால் மாற்று சக்தியைத் தீர்மானிக்க வேண்டிய தேவை காணப்பட்டதால் அப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கினேன்.

ஆனால் தற்போது அதனையிட்டு மனம் வருந்துகிறேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எம்.சி.சி.ஒப்பந்தத்தை காட்டிலும் பாரதூரமான விளைவை நாட்டில் ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தைப் போன்று ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் நாட்டை இவ்வாறு சீரழிக்கவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை ஆச்சரியத்துக்குரியது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் அடிப்படைத் திறன் இல்லாதவரை நிதியமைச்சராக நியமித்து நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக ஜனாதிபதியே இல்லாதொழித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும்.

நிதியமைச்சருக்கு பொருளாதார திறன் இல்லாத காரணத்தால்தான் ஜனாதிபதி அவருக்கு ஆலோசனை வழங்க துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமித்துள்ளார்.

சிறந்த ஆலோசனைகளுக்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மதிப்பளிப்பதில்லை.ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏனைய குழுக்களை போன்றதொரு குழுவாகவே பொருளாதார ஆலோசனை குழுவும் பயனற்றதாகக் காணப்படும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் வெகுவிரைவில் ஒன்றுதிரண்டு வீதிக்கிறங்குவார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வசம் நிறைவேற்றதிகாரம் இருக்கும் வரை நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. – என்றார்.

## போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 132 பேருக்கு எதிராக இன்டர்போல் சிவப்பு அறிவிப்பு!

இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்குத் தப்பிச்சென்றுள்ள போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 132 பேருக்கு எதிராக இன்டர்போல் ஊடாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் தற்போது டுபாயில் இருக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், கடந்த ஆண்டு போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 95 ஆயிரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஆயிரத்து 630 கிலோகிராம் ஹெரோயின், 15 ஆயிரம் கிலோகிராம் கஞ்சா மற்றும் ஆயிரத்து 377 கிலோகிராம் செயற்கை போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

## சிறுமி ஒருவர் விபத்தில் சாவு!

தனமல்வில உடவலவ வீதியில் 34 கிலோமீற்றர் கட்டை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். தனமல்விலவில் இருந்து உடவலவை நோக்கி பயணித்த ஓட்டோ, எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த ஓட்டோவின் பின்னால் பயணித்த சிறுமி தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஊவா, குடாகம, தனமல்வில பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றும் ஓடடோவின் சாரதி ஆகியோர் காயமடைந்த நிலையில் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## காமினி லொக்குகேயின் சாரதி கொலை; மற்றுமொருவர் சந்தேகத்தில் கைதாகினார்!

அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரை கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சனிக்கிழமை பிற்பகல் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதி கடந்த 21ஆம் திகதி மாவித்தறை பகுதியில் வைத்து கத்தியால் குத்தி கொல்லப்பட்டமையுடன், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் முன்னதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்புலன்ஸ் மோதி மாணவி ஒருவர் சாவு!

தியத்தலாவ – பண்டாரவளை வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நோயாளர் அம்புலன்ஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 17 வயதுடைய மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டாரவளை வைத்தியசாலையில் இருந்து தியத்தலாவை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் ஒருவரை ஏற்றிச் சென்ற போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் ரத்கரச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி என அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் அவரது சகோதரர் தற்போது ஆபத்தான நிலையில் தியத்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தியத்தலாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மரத்துடன் மோதி பஸ் விபத்து பயணிகள் மயிரிழையில் தப்பினர்

மாவனெல்லயில் இருந்து ஹெம்மத்தாகம ஊடான கம்பளை வீதியில் பஸ் ஒன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் 45 பேர் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மரத்தில் மோதி பஸ் நின்ற காரணத்தால் ஏற்படவிருந்த பெரும் ஆபத்தில் இருந்து அவர்கள் உயிர் தப்பித்தனர் என ஓட்டுநர் தெரிவித்துள்ளார்.



## ஓமானின் எரிவாயுக் கப்பல் இலங்கையை வந்தடைந்தது

ஓமானின் கடனுதவியுடன் 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்றிச் வந்த கப்பல் சனிக்கிழமை இரவு இலங்கையை வந்தடைந்ததாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு இறக்கும் பணி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூடப்படும் கெரவலப்பிட்டிய லிற்றோ காஸ் நிலையம் வழமை போன்று இயங்குவதாகவும், ஒரு லட்சம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் நேற்று சந்தைக்கு விநியோகிக்கப்பட்டன எனவும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நுட்பவியல் அவத்தை 11

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# ஈ.வாகனங்கள்

இலங்கை இன்று எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒருசில ஆண்டுகள் செல்லலாம், விலையேற்றங்கள் மூச்சுத்திணறவைக்கின்றன. பெற்றோல் விலையேற்றத்தால் வாகனங்களை ஓட்டமுடியாதநிலை காணப்படுகின்றது. பெறோலியப் பொருள்களில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்று என்ன? என்ற கேள்வி எழுகின்றது. பொதுவாக பெற்றோலியப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் அதிகரிப்பு காரணமாக பெற்றோலியப் பாவனை வாகன உற்பத்திக்கு மாற்றீடான மின்சார வாகன உற்பத்தி பற்றி சிந்திக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதேவேளை இலங்கையில் மின்சாரத் தடை காரணமாக மின்சார உற்பத்திப்பொருள்களுக்கு மாறுவதும் சிரமமான ஒன்றாகவுள்ளது.

இருப்பினும் இலங்கையிலுள்ள நெருக்கடியான சூழல் பெற்றோலியப் பொருள்களின் விலையேற்றம் மாற்று வாகனப்பாவனை பற்றிய சிந்தனையைத் தீவிரப்படுத்துகின்றது. இந்த நிலையில் ஈ.வாகனங்களுக்கான நுட்பியல் அவத்தை பற்றிப் பார்க்கலாம்.




ஈ.வாகனங்கள், புவிவெப்பமாதல் பிரச்சினைக்கான பசுமைத் தீர்வாக அண்மைக்காலமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. புவி வெப்பமடைதல் என்பது உலகளவில் சுற்றுச்சூழலை பாதிக்கும் ஒரு கடுமையான பிரச்சினையாகும், உலகம் முழுவதும் முதன்மையாக போக்குவரத்துக்காக பெற்றோலிய எரிபொருள்களின் அதிகப்படியான நுகர்வு காரணமாக, இது உலகளாவிய கார்பன் வெளியேற்றத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. இதன் விளைவாக, பல சுற்றுச்சூழல் உணர்வாளர்கள் பெற்றோலிய எரிபொருள்களை மாற்றுவதற்கு நிலையான மாற்றுகளைத் தேடுகின்றனர்.

மின்சார வாகனங்களை (Electric vehicle) இதற்கான பயனுள்ள மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து தீர்வாகச் சுட்டிக்காட்டுகின்றார்கள். இவை மலிவு விலையில் மட்டுமல்ல, எளிதில் எடுத்துச் செல்லக்கூடியவையாகவும் உள்ளன. அவற்றின் விலையும் மிகவும் குறைவு. பெற்றோலிய எரிபொருள் அடிப்படையிலான வாகனத்தின் கொள்முதல் விலை அதிகம் என்பதோடு தொடர்ச்சியாகப் பல செலவுகளையும் கொண்டதாகும். உதாரணமாக பெற்றோலில் இயங்கும் கார் ஒன்றை வாங்கும் போதே இன்சூரன்ஸ் கட்டணம், தினசரி எரிபொருள் செலவு, வழக்கமான பராமரிப்பு செலவுகள் என அனைத்தும் குவியத் தொடங்கும்.

இவ்வாறான செலவுகளுடன் ஒப்பிடுகையில், ஈ–வாகனங்கள் மிகவும் மலிவானவை மற்றும் வேறு எந்த இயங்கும் செலவுகளையும் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இருப்பினும், மின்சார வாகனங்களின் மிகப்பெரிய நன்மை என்னவென்றால், அவை பெற்றோலிய எரிபொருள் பயன்பாட்டை கணிசமாகக் குறைக்க அனுமதிக்கின்றன. மின் – வாகனத்தை வைத்திருப்பதன் மூலம், ஒட்டுமொத்த கார்பன் தடயத்தையும் குறைக்கலாம். ஆனால் இதற்கு மின்சாரம் அவசியமாகின்றது.

தற்போது உலகெங்கும் எலக்ட்ரிக் சைக்கிள்கள் பிரபலமடைந்து வருகின்றன. இவை வழக்கமாக சார்ஜ் செய்யப்பட வேண்டும், அதாவது அடிப்படை வசதிகளைக் கொண்ட மின்–சைக்கிள்கள் ஒரு முறை சார்ஜ் செய்தால் 20–30 மைல்கள் வரை செல்லும். நகரங்களில் மக்கள் பயணிக்க இது போதுமானது. மிட்– ரேஞ்ச் எலெக்ட்ரிக் பைக்குகள் ஒருமுறை சார்ஜ் செய்தால் 50–70 மைல்கள் பயணிக்க முடியும், அதே நேரம் டாப் – எண்ட் பைக்குகள் கிட்டத்தட்ட 100 மைல்கள் வரைப்பயணிக்கின்றன. இந்த பைக்கை முழுமையாக சார்ஜ் செய்ய பல மணி நேரம் காத்திருக்க வேண்டியதில்லை. பேட்டரி தொழில்நுட்பத்தில் விரைவான முன்னேற்றங்கள் காரணமாக, வேகமாக சார்ஜ் செய்ய முடியும்.



மக்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க, சாலையில் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது இறுதியில் போக்குவரத்து நெரிசலுக்கு வழிவகுக்கிறது. ஒரு இலக்கை அடைய எடுக்கும் நேரத்தை நீடிக்கிறது. பெற்றோலிய எரிபொருள் வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் போது வாகனங்கள் மெதுவான வேகத்தில் நீண்டநேரம் நகர வேண்டியிருப்பதால், எரிபொருள் நுகர்வு அதிகரிக்கிறது. இதன் விளைவாக கார்பன் மோனாக்சைடு (CO) அதிகமாக வெளியேற்றப்படுகிறது, இது காற்றை மாசுபடுத்துகிறது மற்றும் நமது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். அதற்குப் பதிலாக, நகரப் போக்குவரத்தில் எளிதாக பயணிக்க, பேட்டரியில் இயங்கும் பைக்குகளைப் பயன்படுத்திக்கொள்ள லாம். மின்– பைக்குகள் சாலைகளில் போக்குவரத்தை கணிசமாகக் குறைக்கும், இடங்களுக்குச் செல்வதற்கான நேரத்தைக் குறைக்கும். இதன் விளைவாக, காற்று மாசுபாட்டைக் குறைப்பதிலும் சுற்றுச்சூழலுக்கு உதவுவதிலும் பங்கைச் செலுத்துகிறது எனலாம். தற்போது இந்த மின்சார பைக்குகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் பிரபலமடைந்து வருகின்றன. அவை நமது சுற்றுச்சூழலுக்கான மிகவும் நிலையான விளைவைத்தருபவையாக இனங்காணப்படுகின்றன.



மொத்தத்தில், இலங்கையின் இன்றைய நிலைக்கு ஈ– வாகனங்கள் சிறந்த மற்றும் மிகவும் சாத்தியமான போக்குவரத்து தீர்வுகளில் ஒன்றாகும். அதற்காக அவ்வாறான வாகனங்களை இறுக்குமதி செய்ய வேண்டும். இதற்கு டொலர் வேண்டும். இது இலங்கையிடம் கையிருப்பில் இல்லை அதனால் இலங்கையின் எரிபொருளுக்கான மாற்றீடு என்பது இடியப்பச்சிக்கலானது.

உலகெங்கிலும் உள்ள சில நாடுகள் ஈ.சைக்கிளை இன்னும் சைக்கிள் என்று கருதுகின்றன. வாகனப் பதிவு, உரிமத் தகடு பெறுதல் அல்லது காப்பீடு செய்தல் போன்ற கடினமான மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் செயல்முறையை தவிர்க்கின்றன. இந்த ஈ.சைக்கிள்களை நேரடியாக சைக்கிள் கடைக்குச் சென்று வாங்க முடியும். பதிவுக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல், காத்திருத்தல் தேவையில்லை எனலாம்.



தற்போது மின்சார சைக்கிள்களுக்கான பாவனை அதிகரிப்பதால் உலகெங்கிலும் உள்ள நகரங்கள் பொது சார்ஜ் செய்யும் நிலையங்களுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துகின்றன.

அனைத்து வயதினரும் எலக்ட்ரிக் சைக்கிள்களை எளிதில் பயன்படுத்தலாம், வயதானவர்களும் கூட. வயதானாலும் சுறுசுறுப்பாக இருக்க விரும்பினால், முதியவர்களுக்கான மூன்று சக்கர பைக்குகளும் உள்ளன.

ஈ. சைக்கிள்களின் ப்ரேமில் பெரிய லித்தியம் பற்றரி பொருத்தப்பட்டிருக்கும். அதை கவனமாகக் கையாளாவிட்டால் தீ ஆபத்தை உண்டாக்கலாம் என நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். அவற்றை நூற்றுக்கணக்கான முறை சார்ஜ் செய்து, பாவிக்கலாம். ஒப்பீட்டளவிலும் இலகு ரகமாகவும் அவை உள்ளன. மேலும், பல வகை பற்றறிகளை விட குறைந்த அளவிலான நச்சு உலோகத்தை லித்தியம் பற்றறி கொண்டிருக்கிறது. ஆனாலும், அவை எளிதில் தீப்பிடிக்கும் தன்மை வாய்ந்தவை என்ற கூற்றையும் நாம் ஒதுக்கி விட முடியாது. ஈ.–சைக்கிள்களில் லித்தியம் பேட்டரிகள் இரண்டு எலக்ட்ரிக் டெர்மினல்களைக் கொண்டிருக்கின்றன. இடையில் ஒரு எலக்ட்ரோலைட் திரவம் உள்ளது. இங்கு பற்றறி சார்ஜ் செய்யப்படும் போதும் டிஸ்சார்ஜ் செய்யப்படும்போதும், சார்ஜ் செய்யப்பட்ட அயனிகள் ஒரு மின் முனையிலிருந்து மற்றொன்றுக்கு நகரும். இந்த எலக்ட்ரோலைட் திரவம் எரியக்கூடிய தன்மை வாய்ந்தது. இது பொதுவாக நடக்கக்கூடியது அல்ல. ஆனால் பற்றறி சேதமடைந்தாலோ அதிக வெப்பமடைந்தாலோ, இந்த திரவம் எரிய வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். மேலும், பற்றறி செல் கூடுதலாக வெப்பம் அடைந்தால் அருகில் உள்ள அதன் பாதைக்கும் அந்த வெப்பம் செல்லும். அதன் அழுத்தம் விரைவில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாகும்போது பற்றறி வெடிப்பு ஏற்பட்டு தீ ஏற்படுகிறது. இந்தக்காரணத்துக்காக இப்போதும் கூட விமானங்களில் இந்த வகை எலக்ட்ரோலைட் திரவம் அல்லது பற்றறிகள் அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால் , ஈ. வாகனங்களை வாங்கும் முன்பு தயாரிப்புநிறுவனம்வெளியிட்டுள்ளவாடிக்கையாளர் கையேட்டை படித்து, முன்னெச்சரிக்கை அறிவுரைகளை புரிந்து கொள்ள வேண்டும். பற்றறியுடன் பொருந்தக்கூடிய சார்ஜரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சார்ஜரை நேரடியாக சுவர் வழி மின்சார சுவிச்சில் மட்டும் சொருக வேண்டும். ஈ – வாகனங்களின் பற்றறியை ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றுவது நல்லது. ஈ. வாகனத் தொழில்நுட்பம் ஒவ்வோர் ஆண்டும் மாறுகிறது. அதற்கு உகந்தவாறு பற்றறி தயா ரிப்பு உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். பழைய லித்தியம்–அயன் பற்றறிகளை வீட்டில் வைத்திருப்பது நல்லதல்ல.

உலககெங்கும் ஈ– சைக்கிள்கள்; நீண்ட காலமாகமே புழக்கத்தில் உள்ளன. இது போலவே, சமீப ஆண்டுகளாக ஈ – கார்களும் சந்தையில் பிரபலமாகி வருகின்றன. ஈ.வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் சில ஈ–பஸ்களைத் தயாரிக்கின்றன. எமது நாளாந்த வாழ்வில் நுட்பியல் அவத்தை எவ்வளவுதூரம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதற்கு இந்த ஈ.வாகனங்கள் நல்ல உதாரணமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

## அரசின் உள்ளகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் அதிருப்தி வெளியிடும் வகையில் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

25 மார்ச் 2022 அன்று காலை பத்தரை மணியளவில் ஜனாதிபதியின் தலைமையில் அரச தரப்பினருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாகிய தமிழரசுக் கட்சிக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கும் (புளொட்) இடையில் பேச்சு நடைபெற்றது. இதில் எமது கட்சி பங்கு கொள்ளவில்லை. அதற்கான காரணங்களையும் தெளிவாக நாங்கள் முன் வைத்திருந்தோம். நல்லிணக்க வெளிப்பாட்டை அரசு தெரியப்படுத்த வேண்டும் என்றும் அதற்கான சில கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை அரசு நடைமுறைப்படுத்திய பின்னர் பேச்சுகளில் கலந்து கொள்வது ஆக்கபூர்வமாக அமையும் என்பது எங்கள் நிலைப்பாடாக இருந்தது. இதில் அவதானமாக செயற்பட வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தி இருந்தோம்.

**ஏமாற்றிய அரசுகள்**

கடந்த காலங்களில் ராஜபக்ஷ அரசோடு நடத்திய பேச்சுகளை தங்களுக்கு சார்பாக அவர்கள் கையாண்ட அனுபவங்களையும் சுட்டிக் காட்டி இருந்தோம். எமது தரப்பில் அரசாங்கத்தோடு பேசித்தான் தமிழர்களுக்கு தீர்வு காண வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் எதிர்பார்ப்புகளோடும் நாங்கள் கலந்து கொள்ளும் பேச்சுகளை தங்கள் நிகழ்ச்சி நிரலுக்குள் முடக்கி விடக்கூடிய ஆபத்து இருப்பதிலும் அச்சம் கொண்டிருந்தோம். இருப்பினும் எமது அங்கத்துவ கட்சிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டன.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சனை இருப்பதை அரச தரப்பு ஏற்றுக் கொள்ளாத நிலையில் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வு விடயமாக நாம் எதிர்பார்த்த கருத்துக்களையே அரசு தெரிவித்திருந்தது. அதை நிறைவேற்ற முடியாத நிலைமையில் அரசு இப்பொழுது இருப்பதையும் நாங்கள் நன்கு அறிவோம்.

அதற்குப் பின்னராக நாம் முன்மொழிந்த முக்கிய நல்லிணக்க கோரிக்கைகள் உள்ளடங்கலாக சில விடயங்களை நிறைவேற்றுமாறு எமது அங்கத்துவகட்சிகள் அரசை கோரியிருந்தனர். இதை அரசு கையாள முற்பட்டுள்ள முறையில் நாங்கள் மிகுந்த கவலையும் கரிசனையும் கொண்டுள்ளோம்.

அரசு எதிர்கொண்டிருக்கும் சர்வதேச விசாரணை மற்றும் நீதி பொறிமுறையை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கையாக சில உறுதிமொழிகளை வழங்கி இருப்பது ஆபத்தானவையாக இருக்கின்றன. நல்லிணக்க கோரிக்கைகளை நிறைவேற்றுவது போல கூறிக்கொண்டு எமது மக்களின் நீண்டகால முயற்சிக்கு பின்னர் தற்பொழுது ஐ.நாவில் முன்னெடுக்கப்படும் நீதிப் பொறிமுறையை அரசு தவிடு பொடியாக்க இடமளிக்க முடியாது.

**சர்வதேச விசாரணையை நீர்த்துப்போக வைக்கும் செயல்**

முதலாவதாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சம்பந்தமாக அரச தரப்பில் விசாரணையை ஆரம்பிக்க இருப்பதாக தெரிவித்திருப்பது சர்வதேச விசாரணையை நீர்த்துப்போக வைக்கும் செயலாகும்.

மனித உரிமை மீறல், யுத்தக் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றிற்கு ஆதாரமாக இருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயமாகும். இன்று சர்வதேச நீதி பொறிமுறைக்கு கொண்டு செல்வதற்கு ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கையில் ஐ.நாவும் அதற்கான பலமான கோரிக்கைகளில் எமது தரப்பும் ஈடுபட்டு வருகிறோம். அப்படியான சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு ஆதாரங்களைத் திரட்டுவது சம்பந்தமாக அரசின் நல்லிணக்க வெளிப்பாடுதான் எம்மக்களுக்கு நலன் தரும் பிரதான அம்சமாகும். அதைவிடுத்து அதற்குத் தீர்வாக தாங்கள் உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்கிறோம் என்று அரசு உறுதிமொழி வழங்கியிருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களுகான நீதியை இல்லாமல் ஆக்குகின்ற செயலாகும். அதற்கான சர்வதேச, ஐ.நா. மற்றும் எமது முயற்சிகளை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கையாகும்.

சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு முன் இலங்கை அரசை பாரப்படுத்த வேண்டும் என்று நாங்கள் பலமான கோரிக்கைகளை சர்வதேசத்திற்கு முன்வைத்து கொண்டு அரசின் உள்ளக விசாரணை என்ற பொறிக்குள் அகப்பட்டுக் கொள்ள முடியாது.

**கைதிகள் விவகாரத்திலும் முடிவு திருப்தி இல்லை**

இரண்டாவதாக அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாக நீதி அமைச்சரை கொண்ட குழு ஒன்றை அமைத்து கைதிகள் விடுதலை சம்பந்தமாக சட்ட விடயங்களை பரிசீலிப்பதாக அரசு உறுதிமொழி வழங்கியிருக்கிறது. இதே நீதியமைச்சர் இந்நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை என்று ஊடகங்களிலும் நாடாளுமன்றத்திலும் உரையாற்றி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியவர். இவ்விடயம் சட்டரீதியான முடிவை கடந்து அரசியல் ரீதியாக எட்டப்படும் முடிவே அவசியம். ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகள் மாத்திரமல்ல, ஆதாரமின்றி தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்களும், அண்மையில் அரசியல் காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்ட, குற்றங்கள் ஏதும் இழைக்காத, குற்றங்கள் சாட்டப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற நூற்றுக்கணக்கான வர்களையும் விடுதலை செய்ய முடியும்.

இந்தச் சூழ்நிலையில் விடுதலைக்கான நல்லிணக்க அறிவிப்பை மேற்கொள்ள அரசு தயாராக இல்லை. எமது தரப்பிலும் ஒருவரை நீதியமைச்சரோடு இணைத்து தங்கள் தவறுக்கு எமது தரப்பையும் பங்காளிகள் ஆக்க முனைகிறார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்பது நீதியின் அடிப்படையில் இது வரை காலமும் முடியாத விடயமாகவே உள்ளது. பொது மன்னிப்பின் அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதே நல்லிணக்க நடவடிக்கையாக கருத முடியும். உதாரணமாக, குற்றங்கள், யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றில் ஈடுபட்ட அரசுக்கு தேவையான பலர் ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவிலேயே விடுவிக்கப்பட்டமையை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

**காணி அபகரிப்பை தடுப்பதிலும் அரசு நழுவல் போக்குத்தான்**

மூன்றாவதாக காணி அபகரிப்பு, குடிப்பரம்பல் சிதைப்பு ஆகிவற்றைத் தடுத்து நிறுத்துதல் சம்பந்தமான கோரிக்கைக்கு அரசு நழுவல் போக்கில் பதில் அளித்துள்ளது. தங்களுக்கு அதைப்பற்றி தெரியாதென்றும் அப்படி ஏதும் நடந்தால் தற்காலிகமாக நிறுத்துவதாகவும் கூறியிருக்கிறார்கள். காணி அபகரிப்பு சம்பந்தமாக உரிய ஆதாரங்கள் பல்வேறு தமிழர் தரப்பினராலும் திரட்டப்பட்டு இருந்த நிலையில் அவை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதை அவதானிக்கிறோம். பாதுகாப்பு அமைச்சினால் மாத்திரமல்லாமல், பல்வேறு திணைக்களங்கள், பொறிமுறைகளின் ஊடாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. பிரதான பங்காற்றும் தொல்லியல் ஆணைக்குழுவை உடனடியாகக் கலைப்பது என்பது உட்பட பல முக்கிய விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இது வரை காலமும் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விடுவிப்பு சம்பந்தமாக எதுவும் பிரஸ்தாபிக்க பட்டிருக்கவில்லை.

கடந்த செப்டெம்பர் மாதம் 2021 ஐ.நா. உயர்ஸ்தானிகருக்கு 5 தமிழ் தேசிய கட்சிகள் ஒருமித்து அனுப்பிய கடிதத்தில் மிகக்குறுகிய 6 மாத காலத்துக்குள் நடைபெற்ற காணி அபகரிப்புக்களை ஆதாரத்தோடு சமர்ப்பித்து இருந்தோம். அவை இவ்வருட பெப்ரவரி மாத ஐ.நா. உயர்ஸ்தானிகரால் பிரதான விடயமாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. காணி அபகரிப்பு சம்பந்தமாக கடந்த மனித உரிமைப் பேரவையில் பிரித்தானியா மற்றும் அமெரிக்காவிற்கான வதிவிடப் பிரதிநிதிகள் தமது அக்கறையை தெரிவித்திருந்தார்கள். சர்வதேசத்தின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டு இருக்கும் இவ்விடயங்களை அரசு திசை திருப்புவதாக அச்சம் கொள்கிறோம். அதிகாரப் பகிர்வின் மூலமே இதை தடுத்து நிறுத்த முடியும் என்பதில் நாம் மாறாத நிலைப்பாட்டில் உள்ளோம்.

**ஆட்டைப் பிடித்து ஓநாயின் குகைக்குள் விட்ட நிலைமை மாதிரி**

நான்காவதாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் பொது நிதியத்தை ஏற்படுத்தி வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்காக புலம்பெயர் உறவுகளின் நிதியை பெற்றுக் கொள்ளும் வழிமுறை என்பது ஆட்டைப் பிடித்து ஓநாயின் குகைக்குள் விட்ட கதையாகி விடும். மத்திய அரசு தனது எண்ணப்படியே அந்த நிதியை பயன்படுத்தும். அதிகாரப் பகிர்வின் ஊடாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்படும் பொது நிதியம்தான் தமிழ் தேசியத்திற்கான தற்சார்பு பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பதற்கு உதவும். மேலும் அதிகாரப்பகிர்வைக் கோரி நிற்கும் தமிழினம் அபிவிருத்திக்கான நிதியத்தை மத்திய அரசாங்கத்திடம் கையளிப்பது எமது கோரிக்கைக்கு நேர் எதிரானது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே எமது நிலைப்பாடாகும். ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் விடயங்களை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தும் நல்லிணக்க கோரிக்கையை அரசாங்கத் தரப்பு புதிதாக வெளிவர விருக்கும் அரசியல் யாப்பு நிபுணர் குழுவின் அறிக்கையுடன் பிணைப்பது ஆபத்தானதாகும்.

புதிய அரசியல் யாப்புக்கான நிபுணர் குழுவின் பரிந்துரையுடன் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை பிணைப்பது என்பது எமது சமஷ்டி முறையிலான கோரிக்கையை இல்லாதொழிப்பதாகவே அமையும். ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கின்ற, நாம் தீர்வாக ஏற்றுக்கொள்ளாத விடயங்களை, புதிய அரசியல் யாப்பில் எமது அரசியல் தீர்வாகத் திணிக்கும் சூழ்ச்சியாக அமைந்துவிடும்.

**பலமற்ற அரசுடன் பேசுவதில் மிக அவதானம் தேவை**

நிபுணர் குழுவின் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்ற நாடாளுமன்ற பலத்துடனோ அல்லது மக்கள் ஆதரவுடனோ அரசாங்கம் இல்லை. இந்த நிலையில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை முற்றுமுழுதாக அரசாங்கம் நிறைவேற்றுவதுதான் தமிழ்மக்கள் எதிர்கொண்டிருக்கும், நாம் மேலே குறிப்பிட்ட, காணி மற்றும் அபிவிருத்தி விடயங்களில் ஓரளவேனும் நிவாரணமாக அமையும். இது தீர்வுக்கான அரசின் நல்லிணக்க நடவடிக்கையாக அமையவேண்டுமே தவிர தீர்வாக ஏற்க முடியாது.

இறுதியில் ஆக்கபூர்வமான பேச்சுக்கான நல்லிணக்க கோரிக்கைகளே இறுதியில் பேச்சுவார்த்தையாக மாறியிருக்கும் துர்ப்பாக்கிய சூழல் கவலையளிக்கிறது. இதனாலேயே நல்லிணக்க கோரிக்கையாக சில விடயங்களை அடையாளப்படுத்த வைத்து, அவற்றை அரசாங்க தரப்பிற்கு அறிவித்து , அவை நிறைவேற்றப் பட்ட பின்னர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதே எமது இனம் சார் நலன்களைப் பேணும் என எமது அங்கத்துவ கட்சிகளை கோரியிருந்தோம்.

கடந்த காலங்களில், தாம் எதிர்கொள்ளும் சர்வதேச மற்றும் உள்ளக நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காக பேரினவாத அரசுகள் எம்மை பயன்படுத்தி வந்த வரலாறுகளையும் கருத்தில்கொண்டு, எமது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையிலும் சந்தர்ப்பங்களை சரியான முறையிலும் பக்குவமாகவும் எமது இனம் சார்ந்து கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எமது இனம் சார்ந்த இந்நிலைப்பாட்டிற்கு நமது அங்கத்துவ கட்சிகள், தமிழ் தேசியப் பரப்பில் செயலாற்றும் அனைத்து அரசியல் கட்சிகள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், சமூக அமைப்புகள், ஊடகங்கள், புலம்பெயர் அமைப்புகள், தமிழ் மக்கள் ஆகியோரின் ஆதரவினை கோருகிறோம். - என்று உள்ளது.

---

## யாழ்.பண்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் நண்பகல் 12.30 மணியளவில் காணொலி முறையில் எளிமையாக இது திறந்து வைக்கப் படவுள்ளது.

இதற்கான ஒழுங்கை யாழில் உள்ள உள்ள இந்தியத் துணைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

எனினும், யாழ்ப்பாண பண்பாட்டு மையம் வெகுவிமரிசையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் திறந்து வைக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிரதமர் நரேந்திர மோடியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது இந்த பண்பாட்டு மையம் குறித்து அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் 100 கோடி இந்திய ரூபா செலவில் இந்திய நிதியுதவியின் கீழ் 2016 ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அனைத்து பணிகளும் நிறைவடைந்தும் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் திறப்பு விழாவிற்கான திகதி ஒத்திவைக்கப்பட்டு கொண்டே வந்த நிலையில் இன்றைய தினம் அது எளிமையாகத் திறந்து வைக் கப்பட உள்ளது.

இந்த நிகழ்விற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சுமார் 200 பேரை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் அழைத்துள்ளது.

---

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறியமுடிகின்றது.

அநுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, நிமல் லான்சா, பிரேம்நாத் தொலவத்த, சந்திம வீரக்கொடி உட்பட 10 ஆளுங்கட்சி உறுப்பினர்களே இந்த முடிவை எடுக்கவுள்ளனர்.

சந்திம வீரக்கொடி அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றார். அதிருப்தி காரணமானநிமல்லான்சா அண்மையில் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார். சுசில் பிரேமஜயந்த அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

---

## ஜெய்சங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் நடைபெறவுள்ள 'பிம்ஸ்டெக்' மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று காலை கொழும்பு வருகின்றார்.

கொழும்பு விஜயத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகளுடன் அவர் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இன்று மாலை 4.30 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசவுள்ளது என்று சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

# அரசில் இருந்து வெளியேற வேண்டிய தேவையில்லை!




## மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி. திட்டவட்டம்

அரசுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் சிறந்த நல்லுறவு இருக்கின்றது. எனவே, அரசில் இருந்து வெளியேறவேண்டிய தேவையில்லை. அரசில் இருந்தபடியே மக்களுக்காக போராடும் தைரியம் காங்கிரஸுக்கு இருக்கின்றது என்று இ.தொ.காவின் நிதிச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30 ஆம் திகதி கூடும் எனவும், இதன்போது புதிய தலைவர் பதவி இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நுவரெலியா – நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகை பொருள்கள் நேற்று நுவரெலியா பிரதேச சபைகுட்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கும், கிராமபுற மக்களுக்கும் நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல், நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள், இ.தொ.காவின் இளைஞர் அணி பொது செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன்–

அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும் தனியான கொள்கையுடன் செயற்படும் கட்சியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகும். சர்வக்கட்சி மாநாட்டில் எமது கட்சி ஏன் பங்கேற்கவில்லை என்பது தொடர்பில் கட்சியின் பொதுச்செயலாளர் விரிவாக விளக்கமளித்துள்ளார்.

நாம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம், அவை நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான ஒரு நகர்வாகக்கூட இது இருக்கலாம்.

அரசு மீது இ.தொ.கா. அதிருப்தியில் உள்ளது என எதிரணிதான் பிரச்சாரம் முன்னெடுத்து வருகின்றது. எம்மிடையே சிறந்த நல்லுறவு இருக்கின்றது. எவ்வித பிளவும், பிரச்சினையும் இல்லை. அரசுக்குள் இருந்துகொண்டு, எப்படி போராடி மக்கள் உரிமைகளை பெற வேண்டும் என்பது எமக்கு தெரியும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30 ஆம் திகதி கூடும். இதன்போது தலைவர் பதவிக்கு நியமனம் இடம்பெறும்.

அதேவேளை, கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் 40 ரூபா என்ற மானியம் குறையாது. – என்றார்.

# தமிழ் முற்போக்குக் கூட்டணி தேசிய அரசில் இணையாது!

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி தேசிய அரசொன்றை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துவந்தாலும், அவ்வாறானதோர் அரசுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவை வழங்காது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். தலவாக்கலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனத் தகவல் வெளியாகியுள்ளது. எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு விடுக்கப்பட்டாலும் நாம் அதில் இணையமாட்டோம். தேசிய அரசமைப்பதால் பாரிய மாற்றம் ஏற்படப்போவதில்லை. இதே ஜனாதிபதிதான் ஜனாதிபதி பதவியில் தொடர்வார்.

நாடாளுமன்றத்திலும் அவர்களின் அதிகாரமே காணப்படும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதியதொரு ஆட்சியே எமது இலக்கு. அந்த இலக்கை அடைவதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதற்காக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு, மக்கள் பக்கம்நின்று ஒத்துழைப்பு வழங்குவோம்.

உதவி ஆசிரியர் பிரச்சினை தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளேன். கடிதமும் கையளிக்கப்பட்டுள்ளது. விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சரவை தமிழ் முற்போக்கு கூட்டணி இன்று(திங்கட்கிழமை) சந்தித்து பேச்சு நடத்தும். இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ள பாரத பிரதமருக்கான ஆவணம் மற்றும் மலையக மக்களுக்கான திட்டங்கள் பற்றி இதன்போது கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம். – என்றார்.





# மலையகத்தில் எரிவாயுவுக்கு நேற்றும் மக்கள் வரிசையில்!

மலையகப்பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) எரிவாயு விநியோகம் இடம்பெற்றது. இந்த எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்டவரிசையில் நின்றமையையும் அவதானிக்க முடிந்தது.

நேற்று கொட்டகலை பகுதியில் எரிவாயு வர்த்தக நிலையங்களுக்கு சுமார் 40 எரிவாயு சிலிண்டர்கள் வீதம் விநியோகிக்கப்பட்டன எனவும் இதில் குறித்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி பகுதியில் அதிகமானவர்கள் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நின்ற போதிலும் அதிகமானவர்கள் எரிவாயுவின்றி ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மலையகப்பகுதியில் கடந்த ஒரு சில வாரங்களாக எரிவாயு தட்டுப்பாடு நிலவி வந்தது. இதனால் எரிவாயு விற்பனை நிலையங்கள் மூடப்பட்டமையுடன் எரிவாயு வின்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மலையகத்தில் பல உணவகங்கள், சிற்றூண்டிச்சாலைகள் மூடப்பட்டன.

இடைக்கிடையே மட்டுப்படுத்தப்பட்ட எரிவாயு விநியோகம் இடம்பெற்ற போதும் எல்லோருக்கும் தேவையான எரிவாயு பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியது. இதனால் மக்கள் நீண்ட வரிசையில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக நின்றனர். ஒரு சில இடங்களில் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக போராட்டங்களும் இடம்பெற்றன.

இதேவேளை கடந்த சில தினங்களாக மலையகத்தில் உள்ள எண்ணெய் நிரப்பு நிலையங்களில் எண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகள் காணப்பட்ட போதிலும் நேற்று அந்த நிலை காணப்படவில்லை.

குறைந்தஅளவிலானவாகனங்களே எண்ணெய் நிரப்பு நிலையங்களில் நின்றன.

அதனால் எரிபொருள் ஒரு சில தினங்களில் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சதொசவில் பொருள்கள் கொள்வனவு செய்வோருக்கு கட்டுப்பாடுகள் விதிப்பு!

அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்களை லங்கா சதொச ஊடாக கொள்வனவு செய்வதற்கு மற்றும் விற்பனை செய்வதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலை லங்கா சதொச நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி, அனைத்து மொத்த விற்பனை நிலையங்களிலும் அதிகபட்சமாக 05 கிலோ சம்பா அரிசி, அனைத்து மொத்த விற்பனை நிலையங்களிலும் அதிகபட்சமாக 05 கிலோ நாட்டு அரிசி, அதிகபட்சம் 500 கிராம் சிவப்பு பருப்பு, அதிகபட்சமாக ஒரு கிலோ வெள்ளை அல்லது சிவப்பு சர்க்கரையும் அனைத்து மொத்த விற்பனைநிலையங்களிலும்கிடைக்கும்.

இந்த கட்டுப்பாடுகளை மீறும் சதொச ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் சுகாதார நிலைமை தொடர்பில் எச்சரிக்கை!

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக சிறுவர்கள் மருத்துவ சிகிச்சையை நாடும் போக்கு காணப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். குழந்தைகளுக்கு காய்ச்சலால் நீர்ச்சத்து குறைய வாய்ப்புள்ளதால், அதிகளவில் தண்ணீர் குடிக்க வைக்க வேண்டும். – என்றார். குளிப்பதைக் கட்டுப்படுத்துவதால் வியர்வை கொப்புளங்கள் அதிகரிக்கலாம் எனவும் அதனால் இருமல், சளி எதுவாக இருந்தாலும் குழந்தைகளைக் குளிப்பாட்டுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். குறிப்பாக, குழந்தைகளுக்கு தண்ணீரில் விளையாட அதிக நேரம் கொடுக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2022இல் வெளியிடப்பெற்றது.